உ

ஓம் நமோ நாராயணாய நம

# அருள்மிகுவெங்கடேசப் பெருமாள் திருக்கோயில்,

# மொண்டிபாளையம்

# www.venkatesaperumal.com

## ஸ்தோத்திரப் பாமாலை

**காப்பு**

சீலத் திருவருட் சீர்மிக் கமை சீநிவாசபுரம்
மேலத் திருப்பதி யாமொண்டி பாளைய மீதிலின்பக்
கோலத் திசைவெங்க டேசப் பெருமாள் குணம்புகழ
ஞாலத் திசைசட கோபன்பொற் றுள்மலர் நாடுதுமே

**நூல்**

கதிரணிக் கரிய மணிநிகர் வடிவும்
கமழ்ந்தபுன் னகைத்திரு வாயும்
முதிரருட் கருணை விழிகளும், படைதோய்
முளரியங் கைகளும், பதமும்,
அதிரணித் தாயார் மத்தியிற் றுலங்க
அடற்புள்வேந் தின்மிசை அவர்ந்தென்
விதிரறுத் தாள்வாய் மொண்டிபா ளையம்வாழ்
வெங்கடே சப்பெரு மாளே.

1

மருந்தெனத் தெய்வ மணம் பொலி மகிமை
மதுரபுஞ் சத்தமிழ் கொண்டுன்
திருந்துமங் களகல் யாணவை பவச்சீர்
செப்பியேத் திடஅருள் புரிவாய்
பெருந்தவத் துர்வா சன்புரி பூசைப்
பெட்டகத் தமைந்தசா நித்ய
விருந்தியல் வடிவாய் மொண்டிபா ளையம்வாழ்
வெங்கடே சப்பெரு மாளே.

2

ஆவியுட் பொருளாய் விளங்கிவேட் டவைகள்
அளித்திக பரத்தினைக் கூட்டம்
மாவியப் புறும்நின் அருள் நினைந் துருக
வருள்வசு தேவர்தே வகியாம்
தேவிமெய்த் தவமா மேனிக்கொண் டின்பன்
சிரந்தகோ குலத்தவர் போற்ற

மேவிய வரதா மொண்டிபா ளையம்வாழ்
வெங்கடே சப்பெரு மாளே.

3

சோதனை மாயை கொண்டெனை யின்னம்
துன்புறுத் தாது, மெய் ஞான
சாதனைக் கபாடம் திறந்துபா கவதர்
தாம்பொருந் தின்பவாழ் வருள்வாய்!
பூதனை விடப்பா லுடன்(-) அவள் ஆவி
புசித்(து) உதிப் பிறப்பினால் உறும்பல்
வேதனை யகற்றும் மொண்டிபா ளையம்வாழ்
வெங்கடே சப்பெரு மாளே.

4

விழிபுனல் பொழிய உடம்பெலாம் கனல்சார்
மெழுகென உருகிடக் கருணை
வழிதரும் உனது மேனிகண் டேத்தி
வாழும்நாள் என்றிசைத் தருள்வாய்
அழிதரச் சகடா சுரன்திரு ணுவர்த்
தனை அடர்ந் ததகிலமுற் றசோதை
விழிப்பெறக் காட்டும் மொண்டிபா ளையம்வாழ்
வெங்கடே சப்பெரு மாளே.

5

சாம்பராய் ஒழியும் இவ்வுடல் மீது
சத்திய புத்திவைத் துழல்வேற்(கு)
ஆம்பரத் துவநிச் சயம்தெரிந் தடங்கும்
அநுபவ நிலையளித் தருள்வாய்
தாம்பமை உரலோ(டு) ஊர்ந்து,கு பேரன்
தன்சுதர் தருவுரு ஒழித்து
மேம்படப் புரிவாய்! மொண்டிபா ளையம்வாழ்
வெங்கடே சப்பெரு மாளே.

6

தகாததீக் குணம்பற் பலவுளேன் எனினும்
சாமிநின் பத்தருற் றமைந்த
சுகாநுபூ திச்செல் வம்பேறு மாறு
துதித்தனன், மதித்தருள் புரிவாய்
பகாசுரன் வச்சா சுரன்நகா சுரனும்
பாதகக் குணத்தினர் தமையும்
மிகாதரக் கதிதோய் மொண்டிபா ளையம்வாழ்
வெங்கடே சப்பெரு மாளே.

7

போகமோ கத்தில் மயங்கிடும் பஞ்சப்
புலன்வழி அடைந்து, நின் னுடன் தோய்ந்(து)
ஏகபோ கத்தாம் மெய்ச்சுகம் பெறும்நாள்
எந்நாள் என்றிசைத் தருள்வாய்
யோகமா யையினுர் பிரமனால் ஒளிந்தோர்
உதிக்கவைத்(து) அயன்பர விடத்தெய்
வீகவாழ் வருளும் மொண்டிபா ளையம்வாழ்
வெங்கடே சப்பெரு மாளே.

8

கோளினத் தாடும் புன்புலால் மாயைக்
குரம்பையின் உட்கிடந்(து) அவமே
நாளினைக் கழித்து வா டுவேற் கிரங்கி
ஞானஆ னந்தம்ஈந் தருள்வாய்
காளியன் தவத்தாற் றிருவடி சூட்டிக்
கரையில்வன பவமறக் கடத்தி
மீளியல் முதல்வா மொண்டிபா ளையம்வாழ்
வெங்கடே சப்பெரு மாளே.

9

பற்றிடு சுற்றம் பெற்றவர் மைந்தர்
பாசமீ தெறிநமன் உறுங்கால்
சுற்றிநின் றழுவ தன்றிஆ ருயிர்க்காம்

# அருள்மிகுவெங்கடேசப் பெருமாள் திருக்கோயில்,

# மொண்டிபாளையம்

# www.venkatesaperumal.com

துணையெனப் பின்னடை வாரோ
முற்றிய காற்றுத் தீயினை யுண்டு
மொய்த்தகோ பாலர்கோ தனத்தை
வெற்றியிற் புரந்தாய் மொண்டிபா ளையம்வாழ்
வெங்கடே சப்பெரு மாளே.

10

சிரமிசை குவித்த கரத்துடன் உனது
திருவுருத் தெரிசனம் பிரிந்தே
உரமிசை கண்ணீர் மாலைபாய்ந்து உள்ளம்
உருகநின் அருள்உரிந் தருள்வாய்
மரம்இரும்(பு) இளக்கும் வேணுகா னத்தின்
வளரிசை அமுதிற்கோ பியர்கள்
விரகமிக் கிசைக்கும் மொண்டிபா ளையம்வாழ்
வெங்கடே சப்பெரு மாளே.

11

கரித்திரள், இரதம், பரித்திரள், பதாதிக்
கணங்களும் வினைகழி தரும்நாள்
உரித்திலாக் கனவொத்து ஓடும்ஆ ருயிருக்(கு)
உன்னருள் அலதுபற் றுளதோ
வரித்திடாக் காத்தி யாயினி விரதம்
வயக்குகோ பியர்உடை கவர்ந்து
விரித்தஇன் பளித்தாய் மொண்டிபா ளையம்வாழ்
வெங்கடே சப்பெரு மாளே.

12

# அருள்மிகுவெங்கடேசப் பெருமாள் திருக்கோயில்,

# மொண்டிபாளையம்

# www.venkatesaperumal.com

வழிவழி உனக்கே அடிமையாய் உனது
மகிகையே பாடி, நெக் குருகி
அழிதரும் உலகா யதரையும் உன்மெய்
அன்பராத் திருத்திட அருள்வாய்
இழிஉடல் மானம் விட்டுனக்(கு) அன்னம்
இட்டபார்ப் பனமட வார்க்கு
விழியருள் பொழிவோய், மொண்டிபா ளையம்வாழ்
வெங்கடே சப்பெரு மாளே.

13

விதித்தளைப் பட்டுத் தேகபோ கத்தில்
வீழ்ந்தய ராதிறப் பினும், மெய்க்
கதிப்பர மானந் தத்தையித் ததியிற்
கண்டநு பவித்திட அருள்வாய்
பதித்தஇந் திரயா கத்தினை விட்டுப்
பருவத யாகஞ்செய் மினென
விதித்தருள் புரிந்தாய் மொண்டிபா ளையம்வாழ்
வெங்கடே சப்பெரு மாளே.

14

சந்திரா தித்தர் செய்வினைக் களவாத்
தந்திடும் இன்பதுன் பத்தால்
புந்திசற் றயரா(து) உன்னருட் பாதம்
போற்றும்மா தவச்சிறப் பருள்வாய்
இந்திரன் சினந்து மழைவருந் திடலால்
இட்உறு விதம்மலைக் குடைக்கொள்
வெந்திறற் பகவ மொண்டிபா ளையம்வாழ்
வெங்கடே சப்பெரு மாளே.

15

புயனிலாப் புருடன் குயமிலா மங்கை
போற்றும்இல் லறம்புரந் ததுபோல்
பயனிலா உடலம் தாங்கிமா னிடர்கள்
பரிகசித் திடமிக நீண்டேன்

# அருள்மிகுவெங்கடேசப் பெருமாள் திருக்கோயில்,

# மொண்டிபாளையம்

# www.venkatesaperumal.com

நதயனிலாம் கடைக்கண் நோக்கிநீண் டவன்நின்
நல்லடி யானென ஏத்தும்
வியனிலாம் படிசெய் மொண்டிபா ளையம்வாழ்
வெங்கடே சப்பெரு மாளே.
16

மாட்சிமிக் கிசைநின் திவ்விய சகுண
மங்கள மேனிகண்(டு) உருகும்
காட்சியும், விருகம் அனையமா னிடரைக்
கதிவழி செலுத்துமெய் ஞான
ஆட்சியும், படைத்த பரம்ப கவதர்
அடிமையாப் புரிந்தும், மும் மலத்தின்
மீட்சிசெய் சரணம் மொண்டிபா ளையம்வாழ்
வெங்கடே சப்பெரு மாளே.
17

வருந்துறும் தொழிலொன் றறிந்ததல் லாமல்
மகிமைநோய் பரமபா கவதர்
பொருந்துசின் மயப்பே ரின்பநு பவம்ஓர்
புல்முனை அளவறிந் தில்லேன்
திருந்துமெய்த் தொண்டர் அமுதிசை மதுரச்
சீர்த்தியார் கீர்த்தனம் விண்ணோர்
விருந்திலேற் றுவக்கும் மொண்டிபா ளையம்வாழ்
வெங்கடே சப்பெரு மாளே.
18

அடுத்தசீ தேவி கிருபையால் அன்பர்
ஆலயத் திருப்பணிப் பொருட்டால்
எடுத்தவிர் செல்வப் பெருக்கமும் அன்பால்
இசைமலர் மாலிகை சூட்டிக்
கொடுக்கநாச் சியின்பே ரருளினாற் புலமை
கொடுவிளை யாடிட என்னை
விடுத்திட வேண்டும் மொண்டிபா ளையம்வாழ்
வெங்கடே சப்பெரு மாளே.
19

பாகமே லமையும் உனதுகு ணுநு

உ

ஓம் நமோ நாராயணாய நம

# அருள்மிகுவெங்கடேசப் பெருமாள் திருக்கோயில்,

# மொண்டிபாளையம்

# www.venkatesaperumal.com

பவங்களை யேமிகப் பாடி
ஆகமேற் கண்ணீர் அருவிப்பாய்ந் துருகும்
அமலமா தவச்சிறப் பருள
வேகாமேற் கொண்ட கருடன்மீ திவரிந்தென்
விழியெதிர் விளங்கிமா றுத்தெய்
வீகமேற் பொருத்தாய் மொண்டிபா ளையம்வாழ்
வெங்கடே சப்பெரு மாளே.

20

கருச்சளம் நீங்கத் துழாய்முதல் வாசம்
கமழ்இலட் சார்ச்சனை புரிவோர்
விருப்பமுற் றுறச்செய் மொண்டிபா ளையம்வாழ்
வெங்கடே சப்பெரு மாளைத்.
தருப்பொலி சிரவைப் பதியிரா மானந்
தக்குரு தாசன்கந் தசாமி
மருப்பொலி துதிப்பா ஓதுவார் தம்பால்
மங்கள மிகவளர்ந் திடுமே.

21